# 2.2 நாம் ஒளிரும் சுடராவோம்





உலகின் ஒளியாம் இயேசுவை போற்றிடுவோம்
இயேசுவின் ஒளியைப் பெற்றிடுவோம்
நம் வாழ்வினை ஒளிமயமாக்கிடுவோம்
உலகின் இருள் அகற்றி ஒளிர்ந்திடுவோம்

ஆதி மனித வரலாற்றில் விளக்கு முக்கியமானதொரு கண்டுபிடிப்பாகும். பலஸ்தீனாவில் எண்ணெய் விளக்கு ஒலிவ எண்ணெயை எரிபொருளாகக் கொண்டிருந்தது. அதன் திரி சணல் நூலினால் ஆனது. களி மண்ணினால் செய்யப்பட்ட சாதாரண விளக்கை அறையில் ஒளியேற்றி, ஏழைப் பெண் ஒருவர் திராக்மா காசைக் கண்டுபிடிப்பது பற்றி இயேசு கூறினார். அதேவேளை ஏரோது அரசர் சிறப்பான விளக்குகளை உருவாக்கி பெரிதான விருந்து மண்டபங்களை அலங்கரித்தார். உலகில் அனைத்து மக்களின் வாழ்விலும் இருள் களைந்து ஒளியேற்ற விளக்குச் சுடர் இணையற்றதொரு சாதனமாகியது. எனவே, ஒளியும், ஒளியைத் தரும் விளக்கும் பல நாகரிகங்களிலும் மனித வாழ்வினை ஒளிர்விக்கும் **உள்ளொளியைக்** குறிக்கும் அடையாளப் பொருட்களாகியமை புதுமைக்குரியதன்று.

**வாசித்து மகிழுங்கள்**

**அசோகபுரம் (உண்மை நிகழ்வு)**

*வலது குறைந்த பிள்ளைகளுக்கென கம்பளை எம்மாத்தகமை மலைப்பகுதியில் கைவிடப்பட்ட இறப்பர் தோட்ட நிலமொன்று பெறப்பட்டு வளமாக்கப்பட்டது. அதனால் கவரப்பட்ட ஒரு கல்லூரி வாலிபர், தானும்*

*ஒவ்வொரு வார இறுதியிலும் அங்கு சென்று காடுவெட்டி, நிலத்தைப் பண்படுத்தி, பயிரிட்டு வளமாக்கும் பணியில் ஈடுபட்டு வந்தார். அங்கிருந்த பிள்ளைகள் வார இறுதியில் அவர் வருகைக்காகக் காத்திருந்தனர். ஓர் வெள்ளி மாலை வேளையில் கல்லூரியிலிருந்து புறப்பட்டு அங்கு செல்லும் பயணத்தை மேற்கொண்டார். காட்டின் ஓரமாக ஒற்றையடிப் பாதையினூடாக நடந்து சென்றபோது பாதையைத் தவறவிட்டு விட்டார். அவர் கொண்டு சென்ற மெழுகுத்திரி எரிந்து முடிந்து விட்டது. காட்டில் நீண்டநேரம் செய்வதறியாது தடுமாறினார். இறுதியில் கீழே மலையடிவாரத்தில் ஒரு சிறிய ஒளி தெரிந்தது. அதிக சிரமத்துடன் அதனை நோக்கி இருளில் மெதுவாக இறங்கிச் சென்றார். ஒளி ஏற்றப்பட்டிருந்த சிறு குடிசையைச் சென்றடைந்ததும் அப்பாடாவென பெருமூச்சு விட்டார். அந்த வீட்டில் இருந்தவர் பல கேள்விகளுக்குப் பின் அவரை விருந்தினராக ஏற்று உபசரித்து அடுத்தநாள் காலை அவர் அசோகபுரம் சேர்த்தார். இருள் தடுமாற்றத்தை கொண்டு வரும். ஒளி நம்பிக்கையூட்டும் என்பது இந்நிகழ்வு மூலம் தெளிவாகின்றது அல்லவா?*

இவ்வாறு மனித வாழ்வை ஒளிர்விக்கும் ஒளிச்சுடர்கள் நம் ஆலய இறைவழிபாட்டிலும் சிறப்பான இடத்தை வகிப்பது உங்கள் நினைவில் எழுகின்றதல்லவா?

ஒளியின் முக்கியத்துவத்தை அடையாளப்படுத்தும் எண்ணெய் விளக்கு திருமறையின் எபிரேய பாரம்பரியத்தில் அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளது. விடுதலைப் பயணத்தின்போது கடவுளின் உடன்படிக்கைப் பேழை இஸ்ரயேலருக்கு அதிமுக்கியமாயிற்று. அதனை அலங்கரிப்பதற்கு திருத்தலத்தில் பொன்னினால் செய்யப்பட்ட மலர்களால் சித்தரிக்கப்பட்ட விளக்குத் தண்டின்மேல் 7 கிளைகளைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது.





இலவச விநியோகத்திற்காக

**இஸ்ரயேலின் விளக்கு அடையாளப்படுத்துவது**

1) கடவுளின் திருத்தலத்தில் அவரின் உன்னத பிரசன்னம் (விடுதலைப் பயணம் 25:31-35)

2) கடவுள் மக்களுக்குத் தரும் அவரது ஒளி (2 சாமுவேல் 22:29)

ஆண்டவரே நீரே என் ஒளிவிளக்கு;
ஆண்டவர் என் இருளை ஒளிமயமாக்குவார்;

3) கடவுளின் கற்பனைகளின் ஒளி நம் வாழ்வில் பிரதிபலித்தலின் அடையாளம் நீதிமொழிகள் 6:23

கட்டளை என்பது ஒரு விளக்கு;
அறிவுரை என்பது ஒளி

வாழ்வின் இணையற்ற இச்சாதனமாகிய விளக்கு பின்னர் இஸ்ரயேலரின் சமயச் சடங்குகளில் முக்கிய இடத்தைப் பிடித்தது. எருசலேம் திருக்கோவிலில் 'நித்திய விளக்கு' ஏற்றுதல் ஒரு முக்கிய புனிதச் சடங்காகக் கருதப்பட்டது. இது கடவுள் அருளும் நித்திய வாழ்வை அடையாளப்படுத்தியது. வெள்ளிக்கிழமை மாலையிலும் விசேட ஒளிவிளக்குகளை யூதர் வெளியில் வைத்தனர். இன்று பல்வேறு சமயங்களில் ஒளியை ஒரு அடையாளப் பொருளாக உபயோகிப்பதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

## கடவுள் மக்களின் வாழ்வில் ஒளியேற்றுகிறார்

திருவிவிலியம் தொடக்கத்தில் ஒளியைத் தந்த கடவுளை அறிமுகப் படுத்தியது போன்று, இயேசுவின் ஒளியை நமக்கு எடுத்துரைக்கும் திருவிவிலியத்தின் இறுதி அதிகாரத்திலும் அவர் நித்திய ஒளியைத் தருபவராகக் குறிபிடப்பட்டுள்ளார்.



இனி இரவே இராது. விளக்கின் ஒளியோ கதிரவனின் ஒளியோ அவர்களுக்குத் தேவைப்படாது. ஏனெனில் கடவுளாகிய ஆண்டவர் அவர்கள் மீது ஒளிவீசுவார் - (திருவெளிப்பாடு 22:5)



**திருப்பாடல் ஆசிரியரின் செபம்**

"கடவுளே! உம் திருமுக ஒளியை
எம்மீது வீசுவீராக!" (தி.பா. 67:1)

"எம்மை மீட்குமாறு உமது முகஒளியைக் காட்டியருளும்."
(தி.பா. 80:7)

"அவர் அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும்
உண்மையான ஒளி - யோவான் 1:9"

அவரிடம் வாழ்வு இருந்தது.
அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது.
யோவான் 1:4

## தனிமனித வாழ்வில் இயேசு ஒளியேற்றுகிறார்

இயேசு உடலுக்கு விளக்காய்த் திகழ்கிறார். இதனை வலியுறுத்துவதற்கு கண்ணை உடலுக்கு விளக்காய் உவமானப்படுத்துகிறார். **'உங்கள் கண்தான் உடலின் விளக்கு'**

**வாசிக்கவும்**
**லூக்கா நற்செய்தி 11:34-36**

உள்ளத்தில் உள்ளொளி சேமிப்பில் இருந்தால் மட்டுமே கண்கள் நல்லவற்றைக் காண விரும்பும். அதேபோன்று உடலில் ஒளித்தன்மை இருப்பதற்கு கண் நலமாயிருத்தல் வேண்டும். அப்போது உடல் முழுவதும் ஒளி பெற்றிருக்கும். மனிதனுக்குள் இருக்கவேண்டிய ஆன்மீக ஒளியைப் பற்றி வலியுறுத்துவதற்காக ஆண்டவர் இயேசு இவ்வாறு கூறினார்.

மனித வாழ்வில் அடுக்கடுக்காய்ச் சேரும் பாவச் செயல்கள் நம்மை இருளான வாழ்விற்கு இட்டுச் செல்லும். ஆண்டவர் இயேசுவுக்கு ஏற்பட்ட சோதனைகள், எகிப்தில் யோசேப்புக்கு ஏற்பட்ட சோதனைகள் என்பவற்றைப் போல், நம் வாழ்விலும் சோதனைகள் ஏற்படலாம். அவ்வேளைகளில் அலகையின் இருளின் செயல்களுக்கு நாம் இடம் கொடுக்காது, இயேசுவின் ஒளியினால்


இலவச விநியோகத்திற்காக

அவ்விருளை அகற்றிவிட வேண்டும். இந்த ஒளி அணைந்து விடாது இருக்கும் பொருட்டு நாம் அதற்கு வேண்டிய எண்ணெய் மற்றும் திரி என்பனவற்றைப் புதுப்பிக்கவும் வேண்டும். இது நமது செபம், தியானம், திருமறைவாசித்தல், வழிபாடு, பிறர்க்கு பணிசெய்தல் என்பவற்றின் மூலம் நடைபெறுகின்றது. சந்திரன் சூரியனிடம் ஒளியைப் பெற்று பிரகாசிப்பதைப்போன்று, நாமும் தினமும் இறையொளியைப் பெற்றுக்கொண்டேயிருக்க வேண்டும்.

'ஆகையால் உங்களுக்கு ஒளிதரவேண்டியது இருளாயிராதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.' என்கிறார் ஆண்டவர் இயேசு.

இயேசு பார்வையற்றோர் பலரை குணமாக்கிய நிகழ்வுகளை திருவிவிலியத்தில் வாசித்துள்ளோம். அத்துடன் பிணி தீர்க்கும் பல நிகழ்வுகளும் உண்டு. இந்த ஒவ்வொரு அற்புத நிகழ்வின்போதும், அவர்களின் பிணித்தீர்த்தலுடன் மட்டும் நின்றுவிடாது, தொடர்ந்து அவர்களுக்கு வேண்டிய ஆன்மீக சுகத்தையும் கொடுத்து, நிறைவான வாழ்வுக்கு வழியும் காட்டியுள்ளார். அவர்களின் உடல் சுகத்தைப் பார்க்கிலும் ஆன்மீக ஈடேற்றம் முக்கியமானதெனக் காண்பிக்கிறார். முடக்குவாதமுற்றவனை நண்பர்கள் சுமந்து இயேசுவிடம் கொண்டுவந்தபோது, ''உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன'' என்றார். ஒருவர் எழுந்து நடப்பதைப் பார்க்கிலும் அவரின் பாவங்கள் மன்னிக்கப்படுவதை முக்கியமானதாகக் காட்டி, முடக்குவாத முற்றவருக்கு முழுமையாகச் சுகமளித்தார்.

ஆன்மீக ஒளியின் வாசலாக இருக்கும் கண், நெருப்பை ஒத்தது. அது நன்மை தருவது போன்று நம் வாழ்வில் அழிவையும் ஏற்படுத்தக்கூடியது



என்று இயேசு எச்சரிக்கிறார். சோரம்போதல் என்னும் கொடிய பாவத்தை மனிதர் மத்தியில் தூண்டுவது கண்ணாகவே இருக்கிறது. இச்சைநோக்கு இதற்கு வழிவகுக்கின்றது. *''உங்கள் வலக்கண் உங்களைப் பாவத்தில் விழச்செய்தால் அதைப் பிடுங்கி எறிந்து விடுங்கள்''* என்று, மிகைப்படுத்திக் கூறும் பேச்சு வழக்கு மூலமாக மலைப் பொழிவில் இயேசு நம்மை எச்சரித்தார். கடவுளின் திருமுன்னர் முழுமையானவராய்த் தோன்ற பாடுபடுங்கள்; குறைகளைக் களைய பெருமுயற்சி எடுங்கள் என்னும் பொருளிலேயே இக்கூற்றைக் கூறினார். இதன் மூலம் இறையரசின் விழுமியங்கள் எங்கும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பது தெளிவாகின்றதல்லவா?

***நாமும் இயேசுவின் ஒளியைப் பெற்று வாழ்ந்திடுவோம்!***



## எனது செபம்

வாழ்வை வளமாக்கும் ஒளியைக் காண்பதற்கு கண்களைத் தந்த இறைவா, உம்மைப் போற்றிப் புகழ்வதற்கென உமது உள்ளான ஒளியை எனக்குத் தாரும் சுவாமி!
முழு உலகை ஒளிர்விக்கும் ஒளியைத் தந்தவரே, எமது முழு வாழ்விலும் உமது ஒளியைப் பிரகாசிக்கச் செய்தருளும். எம்மை ஒளியின் பிள்ளைகளாக்கியருளும்! ஆமென்.

## செயல்பாடு

*1.* *ஒளியின் பிள்ளைகளாகச் செயல்படுவதற்கான சில சந்தர்ப்பங்கள் யாவை என சிந்தித்து குறிப்பிடவும்.*

*2.* *"உடலுக்கு ஒளிதருவது கண்" என்ற தலைப்பில் உமது பாடசாலை கிறிஸ்தவ மாணவர் சங்கத்தில் உரை நிகழ்த்துவதற்கான குறிப்புகளை எழுதவும்.*

*3.* *பின்வரும் திருவிவிலியப் பகுதிகளை ஆராய்ந்து அவற்றிலிருந்து பெற்றுக் கொள்ளும் ஒளியைப் பற்றிய செய்தியை எழுதுக.*

| | |
|---|---|
| *திருப்பாடல்கள்* | *4 :6* |
| *திருப்பாடல்கள்* | *43:3* |
| *மத்தேயு* | *5 :14* |
| *எபிரேயர்* | *6:4* |
| *1 பேதுரு* | *2 :9* |